# சம்மாந்துறை பிரதேச சபையின் 15 வது கூட்டறிக்கை
# 2019.05.14

சம்மாந்துறை பிரதேச சபையின் 15 ஆவது அமர்வு 2019.05.14 ஆம் திகதி செவ்வாய் கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 15 வது அமர்வுக்கு வரவேற்றவனாக, துரதிஸ்ட வசமாக சென்ற மாதம் 21 ஆம் திகதி நமது நாட்டில் சில பயங்கரவாத சக்திகளினால் நடாத்தப்பட்ட மிலேச்சத்தனமான தற்கொலை குண்டு வெடிப்புக்களினால் 250 க்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகள், குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். அதனோடு காயமடைந்து இன்னும் வைத்தியசாலையில் இருக்கும் சகோதர, சகோதரிகள் மற்றும் குழந்தைகளுக்கு எமது சபை சார்பில் அனுதாபத்தை தெரிவிப்பது மட்டுமல்லாமல், மிலேச்சத்தனமான செயலைக் கண்டித்தும் இன்று இந்நாடு இருக்கும் கவலைக்குரிய நிலையை அவதானத்தில் கொண்டு நமது சபை இறந்த சகோதர சகோதரிகள் மற்றும் குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக 02 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம்.

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம். சஹீல் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற மிலேச்சத்தனமான செயல் எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாத, எவரும் எதிர்பாராத நிகழ்வு. இந்நாட்டை எந்த இடத்திற்கு கொண்டு செல்லப் போகின்றது என்று மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

இன்று இந்நாடு ஏறத்தாள 2009 ஆம் ஆண்டு இருந்த நிலையை விட மிகவும் மோசமான நிலைக்கு வந்துவிட்டது. யுத்த காலத்தில் கூட பாடசாலைகள், அரச நிறுவனங்கள் இயங்கியது. ஆனால் இன்று அனைத்தும் மந்த நிலையில் இயங்குகின்றது. இதற்கு அந்நிய சக்திகள் எந்தளவு பங்காளியாக இருந்தார்கள்? இது ஏன் நடாத்தப்பட்டது? எவ்வாறு நடாத்தப்பட்டது? என்பதற்கு அப்பால் இன்று நடந்ததையிட்டு நாம் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எவ்வாறு இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், இனங்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்குவதற்கும் நமது பங்களிப்பை வழங்க முடியும் என்ற சிந்தனை நம் அனைவருக்கும் வரவேண்டும்.

இவ் அமர்வு முடிந்ததும் இப்பகுதிக்குப் பொறுப்பான 24 வது பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் மஹிந்த முதலிகேவை நான் அழைத்திருக்கின்றேன். உங்கள் எல்லோரையும் அறிமுகம் செய்து அவருடன் கலந்துரையாடல் ஒன்றை அதாவது அவர் எம்மிடமிருந்து எதனை எதிர்பார்கின்றார். நாம் அவர்களிடம் இருந்து தெளிவுபட வேண்டிய விடயங்களை பேசலாம். அவசரகால சட்டத்தின் கீழ் சகல அதிகாரங்களும் முப்படைகளுக்கும் பொலிசுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதில் துரதிஸ்ட வசமாக மக்கள் பிரதிநிதிகளுக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை. அதனை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவருடனான சந்திப்பை ஏற்படுத்தியிருக்கின்றேன்.

துக்கரமான, அதிர்சியான நிகழ்வை எமது சபை எமது ஊர் சார்பில் கண்டிப்பதோடு கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 21 ஆம் திகதி புனித ஞாயிறு ஈஸ்டர் தினத்தை தரிசிக்கச் சென்ற கிறிஸ்தவ சமூகத்தின் மீது பயங்கர வாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலை வன்மையாக கண்டிப்பதோடு இத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் அனுதாபத்தினைத் தெரிவித்தும், காயமடைந்தவர்கள் உடனடியாக குணமடைய வேண்டும் என்று உணர்வு ரீதியாக பிரார்த்திப்பதோடு, கடந்த 30 வருட கால யுத்தத்திற்கு பின்னர் எமது இலங்கை நாட்டில் பரஸ்பர ஒற்றுமையுடன் வாழ்ந்த மக்களை குழப்புவதற்கான ஒரு சதியாகவே காண முடிகின்றது.

அதுமாத்திரமல்லாமல் எமது நாட்டு மக்கள் பல்வேறு பட்ட அச்சங்களுக்குள்ளாகி நிம்மதியிழந்து நிற்கின்றார்கள். மேலும் இவ்விதமான இனவாதத்துடன், தீவிர சிந்தனையுடையவர்களையும் எவ்வித இன, மதமாக இருந்தாலும் கூண்டோடு ஒழிப்பதற்கான வேலைத்திட்டங்களை அனைத்து சமூகத்தினரும் ஒன்றினைந்து முன்னெடுப்பதோடு, எமக்கும் அதற்கான கடப்பாடு இருக்கின்றது. அதாவது நாங்களும் இம்மன்னிலே பல்லின சமூகங்களைக் கொண்டு வாழ்கின்றோம். அதன் அடிப்படையில் எங்களுக்குள்ளே ஒற்றுமையை தொடர வேண்டும் என்ற வேண்டுகோளை விடுப்பதுடன் இன்று ஒருவித இனவாதிகளினால் நமது பிரதேசங்களை அண்டிய பிரதேச வன்முறைகளையம் பெரும்பான்மை இனவாதிகளினால் இன்று கையெடுத்திருக்கின்றனர். அதனையும் வன்மையாக கண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற மிலேச்சதனமான தாக்குதலை வன்மையாக கண்டித்து அச்செயலில் ஈடுபட்டவர்களுக்கு இனம், மதம் பாராமல் தண்டனை வழங்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த ஈஸ்ட்டர் தாக்குதல் என்பது எமது நாட்டைப் பொறுத்தவரையில் எதிர்பாராத ஓர் நிகழ்வு. இந்நிகழ்வில் அப்பாவி பொதுமக்கள் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அச் செய்தி ஆரம்பத்தில் ஒரு செய்தியாகவே இருந்தது. ஆனால் நேரம் செல்லச் செல்ல எமது நாட்டில் ஏற்பட்ட பாரிய அழிவு, பாரிய அச்சுறுத்தல் என்ற ஒரு நிலை உருவாகியது.

யாராக இருந்தாலும் தனது நோக்கத்திற்காக பொது மக்களை இலக்கு வைப்பது காட்டு மிராண்டித்தனமான செயலாகும். உண்மையில் அதனை வண்மையாக கண்டிக்க வேண்டும் அவ்வாறான ஒரு செயல் இனி ஒரு போதும் இந்நாட்டில் இடம்பெறக் கூடாது. அரபு தேசங்களில் தொடர்ந்தும் குண்டு வெடிப்புக்கள், உயிரிழப்பு, தற்கொலை தாக்குதல்கள் போன்றவைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதனை நாம் தொடர்ந்தும் பார்கின்றோம். அவைகள் செல்வந்த நாடுகள். ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் சிறிய நாடு. இந்நாட்டைச் சுற்றி கடல் இருக்கின்றது. இதற்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே, இந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் எமது நாட்டை நேசித்து, அரவனைத்து ஒருவருடன் ஒருவர் இன்முகத்துடன் வாழக்கூடிய சூழல் நிலவ வேண்டும்.

அன்று அச்சம்பவத்தை ஒருசில விசமிகள் ஏற்படுத்திவிட்டுச் சென்றனர். ஆனால் இன்று இந்நாட்டில் ஒரு இணக்கலவரமான ஒரு சூழலும், ஒரு சில பிரதேசங்களில் ஒரு சில அநாகரிகமான செயல்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதிகமான பள்ளிவாசல்கள், முஸ்லிம் வர்த்த நிலையங்கள் தாக்கப்படுகின்றன. இதனை யார் செய்தாலும் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நான் வன்மையாக கண்டிக்கின்றேன். ஏனென்றால் தனக்கு எந்த வகையான பாதிப்பு ஏற்பட்டாலும் அல்லது தனது சமூகத்திற்கு ஏற்படுகின்ற பாதிப்பினை இன்னொருவரின் உயிரை இழக்கச் செய்து இரத்தம் கண்டு அதற்கு தீர்வு கான்பது தீர்வல்ல. அதற்கு மாற்றீடாக வேறு வகையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து தங்களது அழுத்தங்களை வேதனைகளை வெளிக்காட்ட வேண்டுமே தவிர எந்த ஓர் நபர், சமூகத்தின் மீதும் தாக்குதல்களை நடாத்தி நாட்டில் கலவரத்தை உண்டுபன்னி சமநிலயின்மையை ஏற்படுத்துவதென்பது அறிவிலிகள் செய்கின்ற செயலேயாகும்.

இன்று இந்நாட்டில் பாடசாலைக்கு மாணவர்கள் செல்வதற்கு மிகவும் அச்சமடைகின்றனர். நகர்புற பாடசாளைகளுக்குள் குண்டுத்தாக்குதல் இடம்பெறலாம் என்று அச்சம் கொண்டாலும், சாதாரண கிராமப் பாடசாலைகளிலும்கூட மாணவர்கள் செல்வது மிகவும் குறைவாகவே உள்ளது. இது எமக்கு வேதனைக்குரிய விடயம். இந் நாட்டின் அரசின் பங்காளிகளாக மக்கள் சேர்வார்கள். அதன் அடிப்படையிலே இவைகளைப் பார்க்கின்ற போது மிகவும் வேதனையாக இருக்கின்றது. பாடசாலை கல்வி நடவடிக்கை மேலதிகமாக இன்னும் ஓர் இரு மாதங்கள் சேர்த்து அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டிய சூழல் இருக்கின்றது என கல்வி அமைச்சர் தெரிவித்தார். உண்மையில் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்ற சிந்தனைதான் எழுந்தது.

ஆகவே, இவை அத்தனையும் இந் நாட்டுக்கு ஒத்துவராத செயற்பாடுகள். இவ்விடயங்களில் விசமத்தனமான செய்திகள் பரப்பப்படுகின்றதோ அவை அத்தனையும் முடக்கப்பட வேண்டும். அவை நிறுத்தப்பட வேண்டும். வெகுவிரைவில் எமது நாடு வழமையான நல்ல நிலைக்கு வரவேண்டும். அதே போன்று யாராவது ஒருவர் இன்று நாட்டில் இடம்பெறுகின்ற இச் சம்பவங்களை பார்த்து மகிழ்சியடைவாரானால் அவர் இதே போன்ற சந்தர்ப்பத்தினை எதிர்கொள்வார் என்பது எனது இலக்கு. அனைத்து சந்தர்ப்பத்திலும் நான் கூறுவது ஒருவர் துன்பப்படுகின்ற போது நாங்கள் மகிழ்ச்சி அடையாமல் ஆறுதல் கூறுங்கள் அல்லது அனுதாபப்படுங்கள் விமர்சனம் செய்வது தவறு.

எனவே, இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கம் விமர்சனத்தில் ஈடுபடுபவருக்கும் தீவிர வாதிகளுக்கும் எந்த ஒரு மன்னிப்பும் வழங்கக்கூடாது. சரியான சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் எதிர்வரும் 03 தேர்தலுக்கு முகங்கொடுக்க காத்திருக்கின்றது. அச்சந்தர்ப்பத்தில் இவ்வாறான வன்முறை, கலவரம் இடம்பெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதனை இடைநிறுத்துவதற்கு என்ன வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமோ அதற்கு ஜனாதிபதியும், பிரதமரும், முப்படையினரும், பொலிஸாரும், சிவில் பாதுகாப்பு குழுவினரும், பொது அமைப்புக்களும் முன்னின்று செயற்பட வேண்டும். பொது மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறி எனது கண்டனத்தை தெரிவிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 2019.04.21 ஆந் திகதி இடம்பெற்ற உதிர்த்த ஞாயிறு தினத்தில் இறந்தவர்களுக்காக நாங்களும் சில ஆத்ம துஆ பிரார்த்தனை செய்தவர்களாக 21 ஆந் திகதி நடைபெற்றது வன்செயலா அல்லது சதியா என நினைத்து கவலையடையும் வேளையில் 11 வருடகாலமாக முஸ்லிம்கள் றமழானுடைய காலத்திலே கஸ்டப்பட்டு ஒவ்வொரு மாதமும் நோன்பு நோற்றுக் கொண்டு வருவதையிட்டு மிகவும் வேதனையடைகின்றேன்.

உயிர்களை கொலை செய்யும் படியோ, அவர்களை குண்டு வைத்துத் தாக்கும் படியோ இஸ்லாத்தில் கூறவில்லை. எந்த மதத்திலும் கூறவில்லை. இஸ்லாத்திற்கு மாறாக நடந்ததையிட்டு நாங்கள் இறைவனிடம் அவர்களுக்காக துஆ பிரார்த்தனை செய்ய வேண்டும். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டங்கள் நடந்த போதும் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள் என்று வேறாக பார்க்கவில்லை. ஆனால் தற்போது முஸ்லீம்களுக்கு ஏற்பட்ட இச் சிறிய கலவரத்தின் போது எங்களுடன் மிகவும் நட்புடன் இருந்த தமிழ், சிங்கள மக்கள் வேறாக பார்ப்பதையிட்டு மிகவும் வேதனையடைகின்றேன்.

ஏனென்றால் காரியாலயத்தில் வேலை செய்யும் போது முஸ்லிம்கள் குண்டு வைப்பார்கள் அவர்களுடன் அவதானமாக இருக்க வேண்டும் என்று எனது நண்பியான உத்தியோகத்தர் கூறிய போது என் கண்கள் கலங்கி விட்டது. இவ்வாறான ஈன செயலுக்கு காரணமானவர்களை நாங்கள் துரிதமாக காட்டிக் கொடுத்தது போன்றும் இன்னும் இதற்கு யார், யார் உடந்தையாக இருக்கின்றார்களோ அவர்களைக் காட்டிக் கொடுக்க வேண்டும் என்பதனையே நான் எதிர்பார்க்கின்றேன்.

அத்தோடு இவ்வாறான இக்கட்டான செயல்களை வைத்து நாங்கள் கட்சி பேதமின்றி அதாவது கட்சிகளுக்குள் ஏதாவது பிரச்சினைகள் இருந்தாலும் இந்த சந்தர்ப்பத்தில் குளிர் காய வேண்டாம் என்று எனது சக உறுப்பினர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் தற்போது தவறுதலாக இடம்பெற்ற காரணத்தினாலோ தெரியாது தற்போது பாராளுமன்ற உறுப்பினர் M.I.M.மன்சூர் அவர்களின் சாரதி கைது செய்யப்பட்டது மிகவும் கவலைக்கிடமானது. அவர் முஸ்லிம் சகோதரர் நாங்கள் அவர் பிடிபட்டால் என்ன என்று இருக்கக் கூடாது. முதலில் எந்த வன்செயல்கள் இடம்பெறும் போது முன்னின்று செயற்படுபவர்களை தாக்குவது எங்கள் நாட்டின் முதன்மையாக இருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இன்று சிரியாவில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் போது வெளிநாட்டில் தானே நடக்கின்ற போர் என்று நாங்கள் எத்தனையோ பேர் அலக்களித்திருந்தோம். அதே போன்று நிலமைதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நீர் கொழும்பு கொட்டாரமுல்லையில் எங்களது முஸ்லிம் சகோதரர் நேற்று கழுத்து வெட்டி துண்டிக்கப்பட்டார். அவர் எனக்கும் குடும்ப அங்கத்தவர் அவருக்காகவும் நான் துஆ செய்கின்றேன்.

மேலும் எங்களது முஸ்லீம் காங்கிறஸ் உறுப்பினரது வீடு எரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தேடித் தேடி எங்களிடமும் வரக் கூடலாம். எனவே, இந் நேரத்தில் நாங்கள் அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும். நாங்கள் வன்செயல்கள் நடைபெறுகின்ற போது எங்களது தமிழ் சகோதரிகளை

பாதுகாத்திருக்கின்றோம். அவ்வாறே எங்களது முஸ்லிம் சகோதரிகளுக்கும் இக்கட்டான நிலையில் கைகொடுப்பார்கள் என்று நினைக்கின்றேன். ஆனால் தீவிரவாதிகளின் சக்திக்குப் பின்னால் நாங்கள் துணை போகக் கூடாது என்று எங்களது பிள்ளைகளையும் எங்களையும் பாதுகாப்பதுடன் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டும். ஜும்ஆ நாட்களில் ஆண்களை ஜும்ஆவிற்கு அனுப்பிவிட்டு பெண்கள் பாதுகாப்பாக நிற்பதற்கு முன்வரவேண்டும். அதற்காக ஆண்கள் ஜும்ஆக்களை இழக்கக்கூடாது. பள்ளிவாசலுக்கு ஆண்கள் செல்லும் போது பெண்களாகிய நாங்கள் பாதுகாப்பு வழங்க வேண்டும். இது இஸ்லாத்தின் கடமையும் ஆகும். இதற்காக நாம் பெண்கள் அல்லவா வீட்டில் முடங்கிக் கிடக்க வேண்டும் என்று ஓரம் போகக்கூடாது.

எனவே, மற்ற சகோதரர்களிடமும் நடந்தது என்னவென்று இறைவனுக்கு மாத்திரம்தான் தெரியும். எங்களது முஸ்லிம் இனங்களை நீங்கள் வேறுவிதமாக எல்லோரையும் பார்க்க வேண்டாம். அனைவருக்கும் வர வேண்டிய விடயம்தான் ஒவ்வொருவரும் தமது சீட்டுக்களைப் பிடிப்பதற்கு தான் நல்ல இடத்தை பிடிக்கவேண்டும் என்று நடந்து கொள்வார்கள். ஆகவே அரசியல் ஒரு புறம் இருக்க மக்களுக்காக நாம் ஒன்றுபடவேண்டும். இவ்வாறான ஈனச்செயல்களை நாங்கள் தட்டிக் கேட்க வேண்டும் என்றும் அதற்கு நாங்கள் உடந்தையாக இருக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற மாதம் 21 ஆந் திகதி நடந்த சம்பவத்தினையும் அதன் பிற்பாடு நடந்துகொண்டிருக்கின்ற சம்பவத்தையும் வன்மையாக கண்டிப்பதோடு, இதனை நமது சமூதாயத்தில் இருந்து முற்றாக உடைத்தெறிவதற்கு முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் வேண்டிய ஆதரவை வழங்குவதனை ஏகமனதாக தீர்மானம் எடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று நன் கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களின் கருத்துக்களை உள்வாங்கியவனாக, மிலேச்சத்தனமான பயங்கரவாத சக்திகளினால் ஒரு இனத்தின் அடையாளத்தை கெடுப்பது என்னைப் பொறுத்தவரையில் பொறுத்தமில்லை. ஏனென்றால் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தால் இஸ்லாம் மதத்தில் அவ்வாறான செயலுக்கு இடமில்லை. அதனால் அவர்களை முஸ்லிம் பயங்காரவாதிகள் என்று கூறுவதை தவிர்த்து மிலேச்சத்தனமாக பயங்கரவாத சக்திகளினால் அப்பாவி மக்களின் உயிர்களை அழித்தவர்களை வன்மையாக கண்டித்தும் நேற்றும், இன்றும் தொடரும் முஸ்லிம் மக்களை அச்சுறுத்துவது, பள்ளிவாசல்களை உடைப்பதற்கும் பின்னனியாக இருப்பவர்களை அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டவனாக,

**தீர்மானம் 02**
அன்மையில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் மிலேச்சத்தனமான பயங்கரவாத சக்திகளினால் அப்பாவி மக்களின் உயிர்களை அழித்தவர்களை வன்மையாக கண்டித்தும் நேற்றும், இன்றும் தொடரும் முஸ்லிம் மக்களை அச்சுறுத்துவதும், பள்ளிவாசல்களை உடைப்பதற்கும் பின்னனியாக இருப்பவர்களை அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்த வேண்டும் என்றும், முப்படைகளுக்கும் எங்களால் முடியுமான உதவிகளையும் செய்ய வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையின் நடவடிக்கையில் மாற்றம் கொண்டு வருவதற்கு உத்தேசித்துள்ளேன். ஒவ்வொரு புதன் கிழமையும் பொது மக்கள் தினத்தை சகல பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களும் வருகின்ற பொது மக்களின் பிரச்சினைகளை அவ்விடத்திலேயே தீர்த்து வைப்பதற்காக ஏற்பாடுகள் செய்யும் படி செயலாளரை பணித்திருக்கின்றேன். பொது மக்கள் சந்திப்பு நாட்களில் வரக்கூடிய கௌரவ

உறுப்பினர்கள் வருகை தந்தால் பொது மக்களின் பிரச்சினைகளில் நீங்களும் பங்களிக்கக் கூடியதாக இருக்கும்.

5ம் வட்டாரத்தில் புதிய வீதிக்கு ஆதனவரி மதிப்பீட்டு விபரம் சென்ற காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை அதனை தற்போது பூர்த்தி செய்து திணைக்களம் எம்மிடம் தந்துள்ளது. அப் பகுதிக்கு 2018ம் ஆண்டிலிருந்து தண்டப்பணம் இன்றி ஆதனவரி மதிப்பீட்டினை அறவீடு செய்ய வேண்டும்.

**தீர்மானம் 03**

ஏலவே 2011ஆம் ஆண்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட 5ம் வட்டார புதிய வீதியின் விடுபட்ட ஆதன வரி அலகுகளின் மதிப்பீட்டு விபரம், வரி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் தற்போது கணிப்பிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. உரிய ஆதன வரி மதிப்பீட்டினை 2018 ஆம் ஆண்டிலிருந்து தண்டப்பணம் இன்றி அறவீடு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அன்மைய அசாதாரண நிலமை காரணமாக திறந்தவெளி சந்தை மற்றும் இறைச்சிக் கடைகள் இயங்காத காரணத்தினால் குத்தகைக் காரர்களுக்கு ஏற்பட்ட வருமான இழப்பீடு காரணமாக அந்நாட்களுக்குரிய குத்தகைத் தொகை சம்மந்தமாக திறந்தவெளி பொதுச் சந்தை நடாத்தும் இஸ்மாலெவ்வை ஹம்சாட் சபைக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார். இதனைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட நாட்களில் தடையிருந்திருந்தால் அந்நாட்களுக்குரிய குத்தகைத் தொகையை அறவிடாமல் சலுகை வழங்கலாம். இது இறைச்சிக் கடைகாரர்களுக்கும் பொருந்தும்.

**தீர்மானம் 04**

அன்மைய அசாதாரன நிலமை காரணமாக திறந்த வெளி சந்தை, மற்றும் இறைச்சிக் கடைகள் இயங்காத காரணத்தினால் குத்தகையாளருக்கு குறிப்பிட்ட நாட்களுக்கு தடைகள் ஏற்பட்டிருந்தால் அந்நாட்களுக்குரிய குத்தகை தொகையை அறவிடாமல் குத்தகையில் கழிவினை வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

காணி உப பிரிவிடல் தொடர்பாக நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். இதில் பொது நிறுவனங்கள், பிரதேச செயலாளர்கள், அரசியல் பிரமுகர்களிடம் இருந்து ஆகக் குறைந்த பிரிவிடலை மேலும் 04 பேர்ச்சஸ் ஆக குறைக்குமாறு கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. இவ்விடயம் எதிர்காலத்தில் மேலும் உக்கிரமடையக்கூடும் என்பதனால் 04 பேர்ச் ஆக குறைக்கும் விடயம் உங்கள் உள்ளுராட்சி மன்றத்தில் அவசியமாக இருந்தால் தங்கள் அமர்வில் இவ்விடயத்தை சமர்ப்பித்து மாவட்ட உள்ளுராட்சி உதவி ஆணையாளர், மாகாண உள்ளுராட்சி உதவி ஆணையாளர்களின் அனுமதியைப் பெற்று எமக்கு அறியக் கிடைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட கடிதம் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

எமது ஊரில் இருக்கின்ற பாரிய பிரச்சினை என்னவென்றால் சட்டம் என்ன சொன்னாலும், நாம் நமது வளவிற்குள் எதுவும் செய்ய முடியும் என்ற ரீதியில் வீடுகளை கட்டுவதுண்டு. அதற்கு திட்டமிட்டு வளவுகளை பிரிப்பதில்லை. இது நகரப் பகுதியிலும் இருக்கின்றது. கிராமப் பகுதியில் பேமிட்கள் உள்ளது. சென்ற சனிக்கிழமை ஜனாதிபதி அவர்கள் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு உறுதிகளையும், பேமிட்களையும் வழங்கியிருந்தார். அப்படி இருந்தும் இன்னும் பல்லாயிரக் கணக்கான சம்மாந்துறை மக்கள் இப் பிரச்சினையுடன் வாழ்கின்றார்கள். இதில்

பிரிவிடும் வளவின் அளவு தற்போதைய சட்டத்தின் படி நகரத் திட்டமிடல் அல்லது UDA சட்டத்தின் படி ஆகக் குறைந்தது 06 பேர்ச் இருக்க வேண்டும். அதனை 04 பேர்ச் ஆக குறைத்து சிபார்சு செய்வதற்கு கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவர்களது கடிதத்திற்கு முதலே இது சம்பந்தமாக பேசியுள்ளேன். அதிகமான இடங்களில் வளவுகள் பிரிபடாமலும் பிரச்சினைகளும் ஏற்படுகின்றது. கட்டடம் கட்டுகின்ற விடயத்தில் ஒரு இடத்தில் வீதியோரத்தில் கட்டடம் கட்டப்படுகின்றது. நான் அவர்களிடம் சட்டரீதியாக கட்டடம் கட்டுவதற்கு அனுமதி எடுத்தீர்களா? என்று கேட்ட போது அக்கட்டடத்தை திட்டமிட்டவர்கள் கூறிய விடயம் என்னவென்றால், இதற்கு அனுமதி எடுக்க பிரதேச சபைக்கு சென்றால் தங்களுக்கு அனுமதி பெறுவதற்கு 06,07 மாதம் கடந்து விடும், ரூபா 35,000, ரூபா 40,000 செலவுகள் ஏற்படும் என்று பிழையான தகவலை கொடுத்துள்ளார்கள்.

இவ்வாறு சில மக்களும் கூறுகின்றனர். எனவே இதில் கடமையாற்றுகின்றவர்களும் மக்கள் சார்பாகவே செயற்பட வேண்டும். உத்தியோகத்தர்களுக்கு கடமை நிமித்தம் சில அசௌகரியங்கள் ஏற்பட்டாலும் வருகின்ற மக்களிடம் இன் முகத்துடன் அதற்கான உதவிகளை செய்து கொடுக்க வேண்டும். சட்ட ரீதியாக கட்டடத்தை கட்டினீர்களேயானால் பிற்காலத்தில் பாதைகளை விஸ்தீரணம் செய்கின்ற போது உங்களது கட்டடம் உடைக்கப்பட்டால் நஸ்டயீடு பெற முடியும் என்று நான் அவர்களிடம் பல தடவை கூறியும் அவர்கள் அனுமதி எடுக்காமல் கட்டடத்தை கட்டிவிட்டார்கள்.

உறுதிகளை 04 பேர்ச்சாக குறைக்கின்ற விடயத்தில் எமது கௌரவ உறுப்பினர்கள் அதிகமான முயற்சிகளை மேற்கொண்டு தோல்வியை தழுவி விட்டார்கள் இதற்கு முயற்சி எடுக்க முடியாது என்று கூறினர். ஆனால் தற்போது அவர்களே எம்மிடம் 04 பேர்ச் கேட்டுள்ளனர். 03 பேர்ச் கேட்டாலும் நாம் சபை தீர்மானம் வழங்குவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். எனவே 04 பேர்ச் விடயத்தை நாம் அனைவரும் அங்கீகரிக்க வேண்டும் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது பிரதேசத்தில் அதிகமாக உத்தரவுப் பத்திர காணிகள் ஜய பூமி அளிப்புப் பூமிகள் அதிகமாக காணப்படுகிறது. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒருவர் தனது மகளுக்கு காணி கொடுக்க வேண்டுமாக இருந்தால் அவருக்கு ஒரு பகுதியை வைத்து விட்டுத்தான் கொடுக்க முடியும். அவ்வாறு இல்லாமல் அனுப்பினால் மாகாண சபையில் நிராகரிக்கப்பட்டுவிடும். இவ்வாறான பல சிக்கல்கள் இருக்கின்ற படியினால் கண்டிப்பாக 04 பேர்ச் திட்டத்தை கொண்டு வர வேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 04 பேர்ச் காணிக்கு அனுமதி பத்திரம் வழங்குவது சம்பந்தமாக தேர்தல் பிரச்சார காலங்களிலே இப்பிரச்சினையை நான் உள்வாங்கி தேர்தல் முடிந்ததன் பின் இதற்காக அதிகமான முயற்சிகளை மேற்கொண்டும் அதில் தோல்வியுற்றேன். அனைவரும் எனக்கு தந்த விடைகள் என்னவென்றால் பெரும்பான்மை சமூகத்திற்கு கிடைக்கின்ற தீர்வுதான் எமக்கும் கிடைக்கும் எமக்காக வெறுமனே தீர்வு கிடைக்காது என்றார்கள்.

ஏனென்றால் எம்முடைய பிரதேசத்திலே காணிகள் பற்றாக் குறை அதுமாத்திரமல்லாமல் மக்கள் சனத்தொகை அதிகமாக இருக்கின்றதனாலும் 10 பேர்ச்சஸ் காணி இருப்பவர்கள் 03 அல்லது 04 பெண் பிள்ளைகளை வைத்திருந்தால் அவர்களுக்கு 10 பேர்ச்சுக்குள் வீடுகள் கட்டப்படுகின்றது. அதனை 03 பேச்சுக்காவது பிரித்து வழங்க வேண்டும் என்று முயற்சித்தால் அம்முயற்சி கைகூடவில்லை. அதற்கு நானும் என்னால் முடிந்தவரை முயற்சித்தேன். 03 பேர்ச்சுக்கு அனுமதி கேட்டிருந்தும் 04 பேர்ச்சுக்காவது அனுமதி தாருங்கள் என்று கேட்டு உள்ளூராட்சி ஆணையாளர் வரை முயற்சித்தது கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் தெரிந்த விடயம்.

தற்போது 04 பேர்ச்சாக வந்ததனை நாம் அனைவரும் வரவேற்க வேண்டிய விடயம் இருந்தாலும் 03 பேர்ச்சாக குறைப்பதற்கு முயற்சி செய்தால் மக்களுக்கு மீண்டும் இலகுவாக இருக்கும். சுகாதார ரீதியில் பிழையாக இருந்தாலும் அவர்களது பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய தேவைகளை, அவர்களது கடமைகளை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய தேவைகளை எம்மால் இயன்ற முயற்சிகளை செய்து மக்களுக்கு இலகுவாக பிரித்துக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்பதோடு 04 பேர்ச் காணி வழங்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததற்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ் விடயத்தில் மக்கள் பிரதி நிதிகள் என்ற ரீதியில் எதிர்காலத்தை நோக்கி இப் பிரச்சினையை வேறு விதமாக பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. 10 பேர்ச் வளவில் 04 பிள்ளைகளுக்கு பிரித்துக் கொடுக்க முடியாது. அவ்வாறானால் பிரிவிடாமல் அதனை எவ்வாறு பகிர்வது என்ற சிந்தனைக்கு வரவேண்டும். அதாவது தொடர்மாடி என்ற அடிப்படையில் அவ்வீடுகளை ஒன்றாகவும் தனித்தனியாகவும் அனுமதி எடுக்கலாம். அதனால் இப் பிரேரணையில் வசிப்பிடங்களுக்காக 04 பேர்ச்சும் பிரதான பாதைகளில் வர்த்தக நிலையங்களுக்கு ஆகக் குறைந்தது 02 ½ பேர்ச்சும் சிபார்சு செய்யலாம்.

**தீர்மானம் 05**
காணி உப பிரிவிடல் தொடர்பாக ஆகக் குறைந்த பிரிவிடயாக வசிப்பிடங்களுக்காக ஆகக் குறைந்தது 04 பேச் காணியும், பிரதான பாதையில் வர்தக நிலையங்களுக்கு ஆகக் குறைந்தது 2½ பேச் காணியும் வழங்குவதற்கு சிபார்சு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகளை விணைத்திறமையுடையதாக செயற்படுவதற்கு ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கமைய 07 ஆந் திகதி நாங்கள் வீடு வீடாக சென்று கழிவுகள் உள்ள பையை பார்வையிட்ட போது தரம் பிரிக்கப்படாமல் கழிவுகளை வைத்துள்ளார்கள். இது தொடர்பாக மக்கள் தெரிந்தும் தெரியாமலும் நடக்கின்றார்கள். இது தொடர்பாக வீடு வீடாக சென்று அதனை நடைமுறைப்படுத்திக்காட்டி அதனை நடைமுறைப்படுத்த மறுப்பவர்களுக்கு தண்டனை வழங்கும் நிலை இன்று உருவாகிவிட்டது. நாம் தொடர்ந்தும் பிரித்தெடுக்காமல் கழிவுகளை எடுக்க முடியாது அதனால் சனசமூக நிலையங்களுக்கு பாரம் கொடுத்து அவர்கள் மக்களிடம் இது தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும்.

**தீர்மானம் 06**
திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகளை வினைத்திறமையுடையதாக செயற்படுத்துவதற்கு பொது மக்களுக்கு வீடு வீடாக சென்று விளக்கமளிக்கும் செயற்பாட்டினை மேற்கொள்ள சன சமூக நிலைய அங்கத்தவர்களை பயன்படுத்தவதற்கும், அதற்காக ஊக்குவிப்பு கொடுப்பனவொன்றை வழங்குவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சில இடங்களில் மக்கள் குடியேற்றம் இடம்பெற்று வருகின்றது. ஆனால் அவ்விடங்களில் உள்ள பாதைகளால் செல்ல முடியாமல் உள்ளது. ஏனென்றால் பாதையின் நடுவில் மலைகள் காணப்படுகின்றது. அவ்வாறான இடங்களை இனங்கண்டு சரியான முறையில் அப்புறப்படுத்த வேண்டும்.

**தீர்மானம் 07**

எலும்பு அரைக்கும் நிலைய நீரிணைப்புக்கான பாதையிலுள்ள மலை மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை 04ம் குறுக்கு வீதி, சென்னல் கிராமம் - 01 இலுள்ள பாதையின் நடுவிள்ள மலைகளை உடைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 08**

சேதனப் பசளை தயாரிக்கும் நிலையத்திற்காக 3 Phase மின்னிணைப்பு மற்றும் நீரிணைப்பையும் புதிதாக பெற சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**தீர்மானம் 09**

பொலிசாரின் அறிவுறுத்தலுக்கமைவாக பாதுகாப்பு காரணங்களுக்காக பிரதான சந்தியிலிருந்து (ஹிஜ்றா சந்தி) குறைந்தது 150 மீற்றருக்கு அப்பாலும், ஏனைய சந்திகளில் இருந்து 50 மீற்றருக்கு அப்பாலும் பாதை ஓர வியாபரத்திற்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**தீர்மானம் 10**

பிரதேச சபைக்கு உதவும் பொது அமைப்புக்கள், பிரதேச திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புத் துறை அதிகாரிகள், சனசமூக நிலைய நிர்வாகிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் இப்தார் நிகழ்வொன்றை நடாத்த சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**தீர்மானம் 11**

சென்ற மாதம் 2019.04.01 தொடக்கம் 2019.04.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு குறிப்பிட்ட இடங்களுக்கு மின் விளக்குகளால் அழங்கரிப்பது வழக்கம். ஆனால் தற்போதுள்ள அசாதாரண நிலமை காரணமாக சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவ் வேலையை செய்யலாம் அதற்கு இன்னும் நாட்கள் உள்ளது.

**தீர்மானம் 12**
எதிர்வரும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு 03.06.2019 தொடக்கம் 08.06.2019 வரையான நாட்களுக்கு ஹிஜ்றா சந்தி, மணிக்கூட்டுக் கோபுரம் மற்றும் அப்துல் மஜீட் பொது மண்டப முற்பகுதி, பிரதான அலுவலகம் என்பவற்றை மின் விளக்குகளால் அலங்கரிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம். றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 13**
புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு தகுதியான உத்தியோகத்தர்களுக்கு விழா முற்பணம் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ். நிலுவ்பா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் பணியாற்றும் சட்டத்தரணிகள், பொது மக்கள் சந்திற்பிக்காக தற்போது குறித்த நீதிமன்றத்தில் ஒரு கட்டடம் இல்லாத காரணத்தினால் தற்காலிகமாக எமது சபையின் பராமரிப்பில் உள்ள எலும்பு அரைக்கும் ஆலையில் அமைந்துள்ள கட்டடத்தில் ஓர் அறையிலே குறித்த நோக்கத்திற்காக அமைத்து செயற்பட வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் இது தொடர்பாக நானும் அனுபவித்துள்ளேன்.

சட்டத்தரணிகளை சந்திப்பதானால் நீதிமன்றத்திற்கு பின் உள்ள இடத்தில் அமைதியாக சந்திக்க வேண்டும். அல்லது தகரக் கொட்டில் அடித்து சிறிய உணவுச்சாலை உள்ளது அதற்கு செல்ல வேண்டும். அது மிகவும் சிரமமாக உள்ளது. நீதவானும் அதற்குள் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு எமது உதவியை நாடுகின்றார். அதுவரைக்கும் வேலிக்கு அருகில் இருக்கின்ற எமது கட்டடத்தை திறந்து அதில் ஒரு பகுதியை அடைத்து சட்டத்தரணிகளை சந்திப்பதற்குரிய அறையாக கொடுப்பதற்கு உங்களின் அனுமதி இல்லாமல் நான் வழங்க முடியாது. அதற்கு சரியான முறையில் ஒப்பந்தம் செய்து சபைத் தீர்மானத்துடன் வேலியிட்டுத்தான் தர முடியும் என்று கூறியுள்ளேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் ஒரு தடவை அக் காட்சியை அனுபவித்ததன் காரணமாக தங்களுக்கு இலகுவாக விளங்குகின்றது. சட்டத்தரணிகளுடைய அசௌகரியம் என்பதை விட அவர்களுடன் வழக்கு தொடர்பாக கலந்துரையாட வருகின்ற மக்களே மிகவும் சிரமப்படுகின்றார்கள். குறிப்பாக அம்பாரையில் அதற்கு மிகவும் அழகான இடம் உண்டு சில நீதிமன்றங்களில் இடம் இல்லை. அதனால் மக்கள் சட்டத்தரணிகளிடம் பெறப்படுகின்ற முழுப்பயனும் குறைவாக உள்ளது.

எங்களது மக்களிடத்தில் வழக்கு தவணைக்கு முதல் நாளோ அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னரே சட்டத்தரணியின் இல்லம் சென்று வழக்கு சம்பந்தமான அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்கின்ற வழக்காறு குறைவாகவே காணப்படுகின்றது. இது பொது மக்களின் கஸ்டத்தை குறைப்பதற்கு இலகுவாக இருக்கும். ஏனைய ஊர்களில் இருக்கின்ற நீதி மன்றங்களை விட எமது சம்மாந்துறையில் அமைந்துள்ள நீதி மன்றத்திற்கு அக் கட்டடத்தை பெறக்கூடிய வாய்ப்பாக இருக்கின்றது. எனவே நீங்கள் செய்கின்ற உதவி என்னவென்றால் நமது பெரும் சபையானது பொது மக்களுக்கு செய்கின்ற பாரிய உதவியாகவும் பிரயோசனமாகவும் அமையக் கூடும். எனவே எமது சபை பெரும் மனம் கொண்டு அதனை ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று அம் மசோதாவை முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் சென்று அக் கஸ்டங்களை அனுபவித்ததனால் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கூறுகின்றீர்கள். அதனை வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அது பொதுச் சொத்து ஏற்கனவே S.S.P.மஜீட் என்பவரின் கட்டடத்தில் சட்டத்தரணிகள் இருந்தார்கள். பின்னர் காசு கொடுத்தும் அவர்களை அவ்விடத்தில் இருந்து அகற்ற முடியாமல் அங்கேயே இருக்கின்றார்கள். எவ்விடத்திலும் சட்டம் சமமானது கௌரவ உறுப்பினர் அவர்கள் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவர். அவரும் சட்டத்தரணி ஆனால் இவரது காலத்தில் அவ்வாறான எந்தவொரு செயலுக்கும் இடம் வைக்க மாட்டார். இருந்த போதிலும் அனைவரும் நிரந்தரமாக இருப்பவரல்ல மரணம் வரக்கூடியவர்கள். எனவே அவ்வாறான கட்டடத்திற்கு நிதியைப் பெற்று அதே வளவிற்குள் அமைத்துக் கொடுத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

அப் பிரதேசத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட வளவுகளும் உள்ளது. சட்ட ரீதியாக அவைகள் வெற்றியளித்தால் அவ் வளவுகளை அந் நீதிமன்ற வளவுக்கே வழங்க வேண்டும். தற்போது நாம் அக் கட்டடத்தில் ஒரு பகுதியை வழங்குவதானாலும் எமது உறுப்பினரை கௌரவித்து சட்ட ரீதியாக எழுதி 10 ரூபா வாடகை என்றாலும் ஏதோ ஒரு அடிப்படையில் வழங்கினால்தான் அவை உறுதியாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபையின் சொத்து பொதுச் சொத்து அதனை பாதுகாக்க வேண்டிய கடமை சபைக்கு உள்ளது. அதே வேளை பொது மக்களின் இன்னல்களை தீர்க்க வேண்டிய பொறுப்பும் எங்களிடம் உள்ளது. நாம் ஒப்பந்தம் செய்து அவர்களிடம் கொடுத்தால் அவர்களை மீண்டும் அவ்விடத்தில் இருந்து அகற்றுவது கடினமாக இருக்கும். எனவே நீதிமன்ற வளவிற்குள்ளே கௌரவ நீதி அமைச்சரிடம் சபை மூலம் ஒரு வேண்டுகோளை விடுக்கலாம்.

அதே வேளை அன்மையில் இடம்பெற்ற பயங்கரவாத சம்பவத்துடன் தொடர்புபடாத பொது மக்கள் வேறு ஏதாவது காரணத்தினால் கைது செய்யப்பட்டிருந்தால் கௌரவ அமைச்சர் றவூப் ஹக்கீம் அவரது தலைமையில் இலங்கை அரச சட்ட ஆலோசனை வழங்குவதற்காக குழு ஒன்றை நியமித்து இருக்கின்றார். அவர்கள் தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். சம்மாந்துறையைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது வழக்குகளையும் வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். உங்களது சகோதரரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அவர் பயங்கரவாத சம்பவத்துடன் சம்பந்தப்படாதவர் வேறு ஒரு காரணத்தினால் கைது செய்யப்பட்டிருக்கின்றார். எனவே அவருக்கும் சட்ட ஆலோசனைகள் வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றார்கள். எனவே சகல உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது சம்மாந்துறையைச் சேர்ந்த யாராவது பயங்கரவாதத்துடன் தொடர்புபடாதவர்கள் வேறு ஒரு காரணத்திற்காக கைது செய்யப்பட்டிருந்தால் அவர்களுக்கு இலங்கை சட்ட ஆலோசனை வழங்குவதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இருக்கின்றது என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமக்கு ஒரு வருடம் முடிந்து அடுத்த வருடம் ஆரம்பித்து விட்டது இன்னும் 03 வருடத்தில் முடிந்து விடும். அதன் பின் செயலாளரின் பொறுப்பில் இருக்கும். எனவே இக் கட்டடத்தை வழங்குவது 06 மாத காலமோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குவது அதற்கு மேல் எந்த சந்தர்ப்பமும் இல்லை என்ற நிபந்தனை அடிப்படையில் வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்ளலாமே தவிர தொடர்ச்சியாக வழங்க முடியாது.

ஏனென்றால் எங்களது வளத்தாப்பிட்டியில் எமது பொதுக் கட்டடத்தை யானை ஒருவரை தாக்கியதற்காக தற்காலிகமாக இருப்பதற்கு கொடுத்ததற்கு இன்று அவர்கள் காணி ஆணையாளர் நாயகம், கொழும்பிற்கு எழுத்து மூலம் கடிதம் ஒன்றை அனுப்பி அனுமதியைப் பெற்று அதனை நிரந்தர அலுவலகமாக மாற்றி இருந்து கொண்டிருக்கின்றார்கள். தற்போது அதற்கான வேலியும் போடப்படுகின்றது. ஊரில் ஒரு பொதுக் கட்டடம் இல்லை. அதனை பெறுவதற்கு பலதரப்பட்ட

முயற்சிகள் செய்தும் இன்னும் கைகூடவில்லை. சம்மாந்துறை பிரதேச சபையில் கதைத்தும், பிரதேச செயலாளரிடம் கதைத்தும் உத்தியோகத்தர்களுக்கு கட்டடம் வேண்டும் என்று கூறுகின்றார்களே தவிர ஊருக்கு பொதுக் கட்டடம் வேண்டும் என்று சிந்திக்கின்றார்கள் இல்லை.

எனவே, இதற்கு மிகவும் நிதானமாக செயற்பட வேண்டும் வழக்கறிஞ்சர்களுக்கு உதவி செய்ய வேண்டும். எங்களது மக்கள் சட்டத்தரணியை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஆனால் நீண்ட காலம் வழங்குவது நமது கட்டடம் பறிபோவதற்குரிய சாத்தியம் நிச்சயமாக நடந்தே தீரும் என்பதனை கூறிக்கொள்கின்றேன். எனவே குறுகிய காலத்திற்கு கொடுப்பது சிறந்தது என கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சம்மாந்துறை நீதவான் நீதி மன்றத்திற்கு செல்கின்ற பொது மக்கள் 80% மக்கள் சம்மாந்துறையை சேர்ந்த மக்கள். நமது சபை சம்மாந்துறை மக்களின் சபை அதற்கு அப்பால் நீதிமன்றத்தில் இருந்து எமக்கு ஏறத்தாள 30 அல்லது 40 இலட்சம் ரூபா ஒவ்வொரு வருடமும் வருமானமாக வருகின்றது. எமக்கு நிரந்தர வருமானங்களில் ஒன்று நீதிமன்ற தண்டப்பணம். அதற்கு சன்மானமாக எமது பங்களிப்பும் இருக்க வேண்டும். அதில் எமது மக்கள் பிரயோசனப்பட வேண்டும் என்ற காரணத்திற்காகவே தவிர சட்டத்தரணிகளுக்கு உதவுவதற்காக அல்ல என்பதனை கௌரவ உறுப்பினர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நீங்கள் கூறியவாறு உரிய நடவடிக்கை எடுத்து அக்கட்டடத்தில் ஒரு பகுதியை தெரித்து அதற்கு ஒரு வழியை வைத்து நீதிபதி பதிவாளருக்கும், பிரதேச சபை செயலாளருக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு 06 மாதமோ அல்லது ஒரு வருடத்திற்கோ கொடுத்து அதன் பின் புதிப்பிக்கக்கூடியவாறு ஒப்பந்தம் ஒன்றை செய்து வழங்குவது சிறப்பாக இருக்கும். மாதத்திற்கு ஒரு தடவையாவது எமது ஊழியர்களை அனுப்பி நீதிமன்றத்தை நாம் சுத்தம் செய்து கொடுக்க வேண்டும். ஊரில் இருக்கும் சகல அரச நிறுவனங்களுடனும் பிரதேச சபை பின்னிப் பிணைந்து செயலாற்ற வேண்டும் என்பதுதான் எனது நோக்கம். அவ்வாறு அனைவருடனும் இணைந்து செயலாற்றும் போது எமக்குள் ஏற்படும் தடைகள் இலகுவாக நீக்கக் கூடிய வழியாகவும் அமையும்.

**தீர்மானம் 14**

சம்மாந்துறை நீதவான் நீதி மன்றத்தில் பனியாற்றும் சட்டத்தரணிகள், பொது மக்கள் சந்திப்பிற்காக தற்போது குறித்த நீதி மன்றில் ஒரு கட்டடம் இல்லாத காரணத்தினால், தற்காலிகமாக எமது சபையின் பராமரிப்பில் உள்ள எலும்பு அரைக்கும் ஆலையில் அமைந்துள்ள கட்டடத்தில் ஓர் அறையினை குறித்த நோக்கத்திற்காக அமைத்து செயற்பட வேண்டுகோள் விடுத்ததற்கமைவாக, ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களுக்கு அவ்விடத்தின் ஒரு பகுதியை வழங்கவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம். முஸ்தபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 15**

மஹல்லா மஹல்லாவில் அமைக்கப்பட்ட அப்துல் மஜீட் ஜனாசா மண்டப சுற்றுப் பாதை அமைத்து மேலதிக வேலைக்கான கொடுப்பனவினை சபை நிதியிலிருந்து வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 16**
பொலிசாரின் அறிவுறுத்தலுக்கமைய பாதுகாப்புக் கருதி பொது இடங்களில் No Parking Board தேவை ஏற்படுகின்ற போது வைக்க வேண்டியுள்ளதனால் அதனை தயாரிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி

**தீர்மானம் 17**
பொது மக்கள ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்கான இடங்களுக்கு கொங்றீட் வாங்குகள் அமைப்பதற்காக 20 வாங்குகளை கொள்வனவு செய்ய சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் ஒரு பிரேரணையை அனுப்பி இருந்தார் ஆனால் அது நேரடியாக எமது நிர்வாகத்திற்குள் வராததனால் அதனை ஒரு பிரேரணையாக எடுக்கவில்லை. ஆனால் அதில் கூறிய கருத்துக்கள் ஆக்கபூர்வமானது. ஏனென்றால் எமது ஊரில் வர்த்தக நடவடிக்கைகளை கொண்டு வரும் நிலையான அமைப்பும் இல்லை. நிலையான நடவடிக்கைளும் இல்லை.

ஏனைய ஊர்களில் வெள்ளிக் கிழமைகளில் அனைத்துக் கடைகளும் மூடப்படுகின்ற ஒரு கட்டுப்பாடு இருக்கின்றது. ஆனால் இங்கு அவ்வாறல்ல தற்போது வர்த்தக அமைப்பொன்று உருவாகியுள்ளது. ஆனால் ஆக்கபூர்வமான முழு ஒத்துழைப்பும் இல்லை. கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களும் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும் வர்த்தகர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்ற முயற்சி எடுத்தார்கள். இருந்தும் அது பாரிய குறைபாடு.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதன் மூலம் வர்த்தககர்களுக்கு என்ன வகையான நன்மைகள் இருக்கின்றது என்றும் தெரியாது அவர்கள் எவ்வாறு வர்த்தகங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரியாத நிலமையில்தான் காணப்படுகின்றார்கள். தற்போது இருக்கின்ற அசாதாரண நிலமை காரணமாக ஹர்த்தால் போட்டு கடைகளை மூடும்படி கூறினாலும் அவர்கள் கடைகளை திறந்து கொண்டிருப்பார்கள். அம்பாரை, மட்டக்களப்பில் வர்த்தக நிலையங்கள் பதியப்பட்டுள்ளது. ஆனால் சம்மாந்துறையில் அவ்வாறான நிலமை காணப்படாததன் காரணத்தினால் அவர்களுக்குரிய தேவைகளை எமது சபையினால் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்றும் அதனை பதிவதற்கு நாங்கள் முயற்சி செய்த போது பதிவுக் கட்டணமாக 02 இலட்சம் ரூபா பணம் தேவைப்படுகின்றது.

நாங்கள் ஒவ்வொரு வர்த்தகர்களிடமும் கேட்ட போது அதன் நன்மைகள் தெரியாததனால் அதற்கு மறுப்பு தெரிவிக்கின்றனர். இருந்த போதிலும் 15,20 பேரை நாங்கள் உள்வாங்கி அதனை உருவாக்க வேண்டும் என்றும் அவர்கள் பணத் தொகை வழங்கியிருந்தார்கள் என்றாலும் அது போதாதனால்தான் சபைக்கு அப் பிரேரணையைக் கொண்டு வந்தேன். ஏனென்றால் அதில் இருந்து எமது சபைக்கும் வருமானம் வரலாம் என்ற நோக்கத்தின் காரணமாகத்தான் சபைக்கு கொண்டு வந்தேன். சபையூடாக மீதிப் பணத்தை பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இம் முன்மொழிவைக் கொண்டு வந்தேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பிரதேச சபையின் கீழ் அதற்கு ஒரு வழியும் இல்லை அதனால்தான் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை நிச்சயமாக நாம் அதற்கான முயற்சியை முன்னெடுத்து நீங்கள் கூறியவாறு

வர்த்தகர்கள் அனைவரையும் அழைத்து பேச வேண்டும். பல முறைகள் முயற்சி எடுத்துள்ளோம் ஏதோ ஒரு வழியில் இவர்கள் வருமான வரித் திணைக்களத்தில் அகப்படுவார்கள் என்ற காரணத்திற்காகவோ சம்மாந்துறையில் வர்த்தகம் செய்பவர்கள் பதிவு செய்து வர்த்தகம் செய்வதற்கு அஞ்சுகின்றார்கள்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அம்பாரையில் 02 சந்தர்ப்பங்களை பார்த்துள்ளேன். முதலாவது வறுமையை நீக்குவதற்கு வர்த்தக ரீதியான திட்டமிடல். அதற்கு தலைவராக தயாகமகே அமைச்சர் இருக்கின்றார். நாங்கள் பல மாவட்டத்திலும் சிறிய காமன்ஸ்களை உருவாக்கி தொழில் வழங்குகின்றோம் என்ற திட்டத்தை வெளியிட்டு இருந்தார். அந்த வகையில் 20 க்கும் மேற்பட்ட சிறிய காமன்ஸ்கள் பல ஊர்களிலும் இயங்குகின்றது.

இரண்டாவதாக தற்போது இருக்கின்ற அரசாங்கத்தின் ஊடாக தொழில் வளத்தை உருவாக்கும் திட்டத்தையும் முன்மொழிந்துள்ளார். எனவே இது சிறந்த முன்மொழிவு. சம்மாந்துறை வர்த்தகர்களும் இதனைக் கையாண்டால் எதிர்காலத்தில் நன்மை அடையலாம் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவர்கள் கூறுகின்றவாறல்ல அதாவது கல்முனையை எடுத்துக் கொண்டால் அது ஒரு நகரம். அவர்கள் அரசாங்க தொழில் புரிவதை விட வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களே அதிகமாக உள்ளனர். அவர்களிடம் குறைவான பொருட்கள் இருக்கும் அதிகமான வியாபாரம் இடம்பெறும். ஆனால் சம்மாந்துறையில் கோடிக்கணக்கான பொருட்கள் இருக்கும் வியாபாரம் குறைவாகவே இடம்பெறும். இதற்கு காரணம் வெளியூர் வியாபாரிகள் அவர்களது ஊர்களில் விளைகின்ற பொருட்களை எமது ஊருக்கு கொண்டு வந்து மலிவான விலையில் விற்பதனால் அதிகமான மக்கள் அதனையே வாங்குகின்றார்கள். ஏனைய நெல், பசளை வியாபாரங்கள் சிறப்பாக இடம்பெற்றாலும் மற்றய சில வியாபாரம் நஸ்டமான முறையில் இடம்பெறுகின்றது.

தற்போது பதியப்படாத வர்த்தக சங்கம் உள்ளது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை காரணம் என்னவென்றால் எமது ஊரில் எமது மக்கள் மாத்திரமே கொள்வனவு செய்கின்றனர். அதாவது பஸ் தரிப்பிடம் இருந்திருந்தால் அதிகமான வெளியூர் மக்களும் வந்து செல்லும் போது வருமானம் கூடுதலாக வரக்கூடியவாறு வியாபாரங்கள் இடம்பெறும்.

இன்றய காலகட்டத்தில் அதிகமான மக்கள் வயல் வெளிகளில் வேலைகளுக்காக சென்று வருகின்ற நேரம் அந்த சந்தர்ப்பத்தில் மிகவும் கஸ்டப்பட்டுக்கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. வீரமுனை மக்கள், கோரக் கோயில் மக்கள், மல்வத்தை மக்கள் அனைவரும் எங்கு என்ன நடந்தாலும் மிகவும் அன்னியொன்னியமாக, சகோதரத்துவத்துடன் விட்டுக் கொடுத்து அவர்களது தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்கின்றோம். தற்போது நடைபெறுகின்ற பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால் பொதுவாக இலங்கை முன்னடையக் கூடாது என்ற சர்வதேச பிரச்சினையாக இருக்கின்றது. அதே போல் எமது ஊரை எடுத்துக் கொண்டாலும் முன்னேரிக்கொண்டு வருகின்றது. எனவே எமது ஊரை பாதுகாக்க வேண்டும்.

இன்று எமது கன்னியமிக்க சிறீ பத்திரகாலி கோயிலில் எவரோ ஒருவர் ஆயுதத்தை போட்டதற்கு இன்று அதனை சிறீ நேசன் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் நாங்கள் ஆயுதத்தை அதற்குள் போட்டுவிட்டு இனமுறுகளை ஏற்படுத்துவதாக ஊடகம் ஒன்றில் கூறுகின்றார். அவர்கள் எமக்குள் இருக்கின்ற ஒற்றுமை பற்றி விளங்காமல் கூறுகின்றனர். நாங்கள் அவ்வாறு பாரபட்சம் பாராமல் அனைத்து கௌரவங்களையும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதனை அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இனங்களுக்கு இடையிலான உறவுகளுக்கு சம்மாந்துறை பிரதேச சபை முன்னுதாரணம். நாம் எப்போதும் சகல நடவடிக்கைகளுக்கும் பாரபட்சம் இன்றி எமது நடவடிக்கைகளை செய்து கொண்டு வருகின்றோம். அவ்வாறு காளிக் கோயிலில் நடந்த விடயத்தை வேறு ஒருவர் வெளியூரில் இருந்து பிரச்சினையாக எடுப்பார் என்றால் அது சந்தர்ப்பவாதம். ஏனென்றால் அன்றய தினம் காளிக் கோயிலில் மாத்திரம் அல்ல அதற்கு பின்னுள்ள புரன் வளவுகளிலும் கத்தி, கோடாரி போன்றவற்றை வீசியிருந்தார்கள். இச் செய்தி எனக்கு லண்டனில் இருந்து அறிவிக்கப்பட்டதும் சபையில் LED மின் விளக்கு இல்லாத காரணத்தினால் எனது வீட்டில் இருந்த LED மின் விளக்கை அனுப்பி அவ்விடத்தில் பொருத்தப்பட்டது.

அந்தவகையில் சம்மாந்துறை நிர்வாக எல்லைக்குள் இடம்பெறுவதை வைத்து மற்றவர்கள் அரசியல் செய்வதென்றால் அது சந்தர்ப்ப வாதம் அதனை நாம் வண்மையாக கண்டிக்கின்றோம். அவ்வாறான பிரச்சினை இருந்தால் என்னுடன் அல்லது சபையிடம் பேசியிருக்க வேண்டும். நாம் எமது சபை எல்லைக்குள் வாழும் சகல மக்களதும் காவலர்கள். அதில் எவருக்கும் எந்த சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.

மின் விளக்கு பாவனையை 10 வீதமாக குறைக்கப்பட வேண்டும். என்று மான்பு மிகு ஜனாதிபதி அவர்கள் 21 பக்கங்கள் கொண்ட சுற்றிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். காரியாலையங்களில் பாவிக்கப்படும் மின் அலகு குறைக்கப்பட வேண்டும். பாதையில் இருக்கும் தெரு விளக்குகள் ஒரு மணித்தியாலத்தின் பின் போடப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் முன் அனைக்கப்பட வேண்டும் என்றும் அதில் உதாரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு தேசிய பொறுப்பு. அனைவரும் LED மின் விளக்குகளையே பொருத்திக் கேட்கின்றனர். ஆனால் அதன் விலை அதிகம். அதனை கொள்வனவு செய்வதற்கு அதிகமான பணம் தேவைப்படும். நிச்சயமாக சோடியம் விளக்குகள் மாற்றுப்பட வேண்டும். ஆனால் சோடியம், மேற்குறி விளக்குகளை விட LED மின் விளக்குகளுக்கு மின் அதிகமாக பாவிப்பதில்லை. ஆனால் முதலீடு அதிகம்.

அதற்கு கௌரவ அமைச்சர்களின் மூலம் பணம் பெற முடியுமாக இருந்தால் அதனை திட்டமிட்டு பொருத்த வேண்டும். அதனால் ஜனாதிபதியின் கட்டளையை அமுல் படுத்துவதற்கு சகல உறுப்பினர்களும் உங்களது வட்டாரங்களில் என்ன விதத்தில் நாம் இதனை மிகவும் திறமையாக செயற்படுத்தலாம் என்ற ரீதியில் பார்த்து சபைக்கு உதவி செய்யுங்கள். இல்லை என்றால் அதனைப் பூர்தி செய்வது மிகவும் சிரமமாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை Badminton Team கிழக்கு மாகாண சபையிலே பல வெற்றிகளை பெற்றிருக்கின்றது. அதற்கு எமது சபை சார்பாக நாங்கள் பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு, ஜனாதிபதி விளையாட்டுத் தொகுதியில் உங்களது அனுசரனையுடன் அவர்களுக்கு இலவசமாக பயிற்சியில் ஈடு படுவதற்கு அனுமதித்ததற்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்ததோடு அதனை இன்னும் குறிப்பிட்ட காலத்திற்கு நீடித்துத்தருமாறு வேண்டிக்கொள்வதோடு, அவர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி அவர்கள் அங்கு வந்து இலவசமாக பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அவர்களுக்கு ஊக்கமளிக்கலாம்.

எங்களது திட்டமிடல் பிரிவில் இருக்கின்ற உத்தியோகத்தர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். குறிப்பாக தற்காலத்தில் உஸ்னம் அதிகமான காலமாக இருப்பதனால் அப்பகுதிக்கு குளிரூட்டியை வழங்குவதற்க சிபார்சு செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வளங்களை அமைத்துக் கொடுப்பதற்கு சபைக்கும் பங்களிப்பு உள்ளது. தொடர்ந்தும் அவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற றன்மாவத்த வேலைத் திட்டத்தின் கீழ் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மல் 13 ம் வீதிக்கு காபட் இடுவதாக அறிந்து அங்கே சென்று அதனை விசாரித்தபோது, மல் 13ம் வீதியில் மதகு ஒன்று அமைக்கப்படவேண்டிய தேவை இருக்கின்றது. அத்திட்டத்திற்குள் அதனையும் உள்வாங்குமாறு கேட்டுக் கொண்டதற்கினங்க அதனை செய்ய முடியாதென்றார்கள். றன்மாவத்த வேலைத்திட்டத்தில் கொங்றீட் மற்றும் காபட் வேலைகள் மாத்திரம்தான் செய்யலாம் வடிகான், மதகு போன்ற வேலைகளை செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள். இவ்விடயத்தை சென்ற வருடமும் எமது சபையில் பேசியிருக்கின்றேன். அதனை செய்ய முடியும் என்ற தீர்மானம் எடுத்ததோடு அது செய்யப்படவில்லை. எனவே காபட் இடும் வேலைப்பனிகள் ஆரம்பிப்பதற்கு முன் மதகினை செய்வதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறிய திருத்தம் கிழக்கு மாகாண வீதித் திணைக்களத்தினால் சம்மாந்துறையில் 02 பாதைகள் அதாவது விளினையடி சந்தியில் இருந்து சென்னல் கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்ற பாதையும் மல் 13 ம் வீதியும் காபட் இடுவதற்காக சகல வேலைகளும் பூர்தியடைந்து விட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முதலில் மகனேகும என்பதனை மாற்றி தற்போது றன்மாவத்த என்று ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணம் ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படுகின்றது. மல்கம்பிட்டி வீதியில் இருந்து ஜலாலியா பள்ளி வரும் வரை செய்வதற்கு சபையினால் நாங்களும் ஒரு திட்டத்தினை கொடுத்தோம். தற்போது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர் அவர்கள் எதனை இனங்கண்டாரோ தெரியாது. ஆனால் தற்போது அனைத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே வழங்கப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்னும் ஒரு வீதி I Road Project இல் என்னால் முன் மொழியப்பட்ட மதீனா உம்மா வீதி. அதிலே நேற்று நான் பார்த்த போது கொங்றீட் இடுகின்றார்கள். காபட் வீதிக்கு ஏற்கனவே அங்கீகாரம் பெற்று விலை மனுக் கோரலும் கோரப்பட்டு விட்டது. காபட் இடப்பட வேண்டிய வீதிக்கு ஆரம்பத்திலும் முடிவிலும் இல்லாமல் இடையில் ஒரு பகுதிக்கு மாத்திரம் கொங்றீட் இடப்படுகின்றது. எவ்வாறு இதற்கு இந்த சபை அனுமதி வழங்கியது என்பதனை அறிய விரும்புகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எடுத்ததனால் நான் அதற்கு மறுமொழி தரவேண்டியவனாக இருக்கின்றேன். இப் பாதைகள் I Project இன் கீழ் இனங்காணப்பட்டுள்ளது. இதனை செய்ய முடியாது என்று நாங்கள் எழுத்து மூலம் கடிதம் கொடுத்தும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் காபட் போடுவதனால் கொங்கிறீட்டுக்கு மேலாலும் காபட் போடலாம்தானே, பல காரணங்கள் கூறிக்கூறி இவ் வேலைகள் நடைபெறுவதில்லை என்று கூறினார்கள்.

எமது சபை என்னென்ன பாதுகாப்பு எடுக்க வேண்டுமோ அதையெல்லாம் எழுத்து மூலமாக எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசின் அறிவுறுத்தல்களில் எங்கேயாவது உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று ஒரு எழுத்துக் கூட இல்லை. இது சட்டரீதியாக பார்த்தால் அரசியல் யாப்பையே மீறும் செயல். இது ஊருக்கு வரும் அபிவிருத்தியை தடைசெய்யக்கூடாது என்ற பொது நோக்கில் எமது சபை செயற்படுவதனால்தான் இப் பிரச்சினைகள் வருகின்றது.

மதீனா உம்மா வீதிக்கும், இப்றாஹீம்ஸ் வீதிக்கும் சபை எழுத்துமூலமாக அதனை செய்ய முடியாது என்று அனுப்பியும் செய்கின்றார்கள். இப் பாதைகள் நாங்கள் பாரம் எடுக்க மாட்டோம் என்றும் கூறியிருந்தேன். இந்த ரீதியில்தான் நாம் செயற்படலாம் இல்லாவிட்டால் நாம் சபையின் தீர்மானம் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்று தீர்மானம் எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்னல் கிராமம் மருதமுனையார் வீதி 02 கோடி 24 இலட்சம் ரூபாவினால் காபட்டும், வடிகாணும் கொண்டுவருவதற்கு முதல் 65 இலட்சம் ரூபாவைக் கொண்டு அதனை முடித்துவிட்டார்கள். அதில் வடிகாணும் இல்லை வீதியும் இல்லை. இதனால் சம்மாந்துறை பொதுமக்களுக்கே நஸ்டம். உரிய அரசியல் இலாபத்திற்காக பெயரெடுப்பதால் பாதிப்படைவது சாதாரண பொதுமக்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அபிவிருத்தியை வைத்து வாக்கெடுப்பதென்பது குறுகிய காலத்தில் தான் நிலைக்கும் அவ்வாறல்லாமல் திட்டமிடல் இருக்க வேண்டும். அதற்கு நாம் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். எமது சபைக்கும் நாம் ஏதாவது திட்டத்தினை கொண்டுவருவதனால் அவைகளை இனங்கண்டு முடியுமானவரை ஒவ்வொரு ஏரியாவாக செய்து பார்த்தால் சிறப்பாக அமையும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் தொடர்ந்து கூறுகின்ற விடயம் என்னவென்றால் வீதியைக் கொண்டுவந்தவர் அவர் வீரர்போல் வீதி போட்டுத்தரலாம். ஒரு நபரைக் குறிப்பிட்டு அவர் அதற்கு வருகின்றார் இல்லை. அவர்தான் குறிப்பிடுகின்றார் என்று கூறுகின்றார்கள். நாம் சென்று கேள்வி கேட்டால் உரிய அரசியல் இலாபத்துக்காக வீதியை போடுவதை நிறுத்துவதற்கு வந்து விட்டார் என்று கூறுவார்கள். எனவே கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியது போன்று அறிக்கை செய்துவிட்டு இருக்கலாமே தவிர வேறு ஒன்றும் செய்யமுடியாது. மக்கள் அனுபவிக்கும் போதுதான் அதன் தாக்கம் அவர்களுக்கு புரியும் அப்போதுதான் அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாதையின் தரத்தை பற்றியோ அல்லது அதில் இருக்கும் குறைபாடுகள் பற்றியோ உங்களின் முறைப்பாடுகளை சபைக்கு அறிவிக்கும் போது நிச்சயமாக நான் எழுத்துமூலம் நடவடிக்கை எடுப்பேன். 02, 03 தரம் மழை பெய்து உடைந்துவிட்டால் உறுப்பினர்களிடம் தான் கேள்வி கேட்பார்கள். எனவே உறுப்பினர்கள் வீதிகளில் சண்டையிட வேண்டாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சிமுஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதிகமான சபைகள் எதிரணியில் இருப்பதனால்தான் இச் சட்டங்களை கற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது. இருந்தாலும் கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று கொங்கிறீட்டுக்கு மேலால் காபட் போடுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. அதனை வேறு ஒரு வீதியில் செய்யலாம். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பேசி எமது ஊரின் நன்மைக்காக அவ் வீதிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். எவ்வாறு தடுக்க வேண்டுமோ அதனை தடுக்க வேண்டும்.

மின் விளக்கு தொடர்பாக குறிப்பிட்டிருந்தீர்கள். அதனை குறிப்பிட்ட நேரத்திற்கு போடுவதற்கும், அனைப்பதற்கும் ஒருவரை நியமிப்பதற்கான ஏற்பாட்டை செய்தால் மின்னை மீதப்படுத்த முடியும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் இவ் விடயம் பற்றி ஆழமாக சிந்திக்கவில்லை. இதில் சமூக அழுத்தம் காரணமாக தெரு பற்றி சிந்திப்பதில்லை. எனவே, அரசாங்கம் செய்யட்டும் என்பதனை எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் எம்மாலான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விளினியடி சந்தியில் உள்ள பாலம் உடைந்து காணப்படுகின்றது. அதே போல் மல் 08ம் வீதியில் உள்ள பாலமும் பாரிய உடைவுடன் காணப்படுகின்றது. அதனையும் மிக விரைவாக சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று எமது சபையிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டியில் நேற்று முன் சாவு வீட்டில் இரவு 11 மணி வரை இருந்துவிட்டு வந்தேன். பின்னர் இரவு 2½ மணிக்கு சாவு வீட்டால் ஒரு முஸ்லிம் நபர் வந்துள்ளார். அவரிடம் ஏன் இந்த நேரத்தில் வந்தீர்கள் என்று கேட்டதும் அவர் சாராயம் வாங்குவதற்கு வந்ததாக கூறினார். சாராயம் விற்பவரிடம் அவரை அழைத்துச் சென்று கேட்டபோது இந்த நபர் இதற்கு முதல் இங்கு வந்ததில்லை என்று கூறினார்.

அதன் பின் அவருக்கு அடிக்கத் தொடங்கினார்கள் அப்போது அவர் இப் பகுதியில் உள்ள நாடார் கடையில் வேலை செய்வதாகவும் அப் பழக்கத்தில் இங்கு வந்ததாகவும் கூறினார். அப்போது அங்குள்ள நபர் நான் இவரை அக் கடையில் கண்டுள்ளேன் என்று கூறினார். அதனால் அவருக்கு ஒன்றும் நடக்கவில்லை. எனவே தற்காலத்தில் தெரியாத இடங்களுக்கு இரவில் பயணிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு பள்ளிவாசல்களில் அறிவித்தல் வழங்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களை வேண்டுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வளத்தாப்பிட்டி நாடார் கடைகளுக்கு நாம் ரேட் லைசன் கொடுத்துள்ளதனால் வெளியூரில் இருந்து வேலை செய்பவர்களது விபரங்களை உத்தியோகபூர்வமாக எடுத்து நாம் பொலிஸில் அறிவித்து வைக்கலாம். இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

இந்த நேரத்தில் ஆளுநரால் ஒரு கூட்டம் போடப்பட்டபோது நான் கூறிய விடயம் என்னவென்றால் இது ஆயுதப் படையினால் தீர்க்க வேண்டிய பிரச்சினை அல்ல மனதோடு கொண்ட பிரச்சினை. இதில் மக்கள் பிரதி நிதிகள் ஒதுக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு உறுப்பினர்கள் இருப்பதனால் அவர்கள் மூலம் மக்களுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்றும் கூறினேன்.

இந் நாட்டு நிலமையைப் பார்க்கும் போது எப்போது இவைகள் சீராகும் என்று கூற முடியாத ஒரு நிலை. அவை மிக விரைவில் சீராக வேண்டும் என்று கேட்டுக் கொண்டு சபையின் அமர்வு இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை